# பொதுக்காலம் 17ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

ஆன்மீக தாகத்தைத் தணிக்க ஆவலுடன் இறை சன்னதி தேடி வந்திருக்கும் அன்பு மக்களை இறைவார்த்தையால் நிறைவுபெற அழைக்கிறது இன்றைய பொதுக்காலம் 17ம் ஞாயிறு. இத்திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு அழைக்கப்பட்டிருக்கும் அன்புள்ளங்களை இனிதே வரவேற்கிறோம்.

இறைவன் நம்மில் பகிர்ந்தளிக்கும் பண்பை பதிக்கவே நம்மை அழைத்திருக்கிறார். பகிர்தல் என்பது பொருள் மட்டுமன்று; உணவையும் அதனோடு உள்ளன்பையும் பகிர்வது ஆகும். பெரிய மனதோடு சிறிய பொருட்களை பகிர்ந்து அளிக்கும் போது பொருள்களோடு சேர்ந்து பண்பும் பன்மடங்காகிறது மகிழ்ச்சியும் மட்டற்றதாகிறது.

தனக்கென்று வைத்திருந்த ஐந்து அப்பங்களையும் சுயநலமாய் சுகபோகமாய் அனுபவிக்காமல், இயேசுவிடம் கொடுத்து அதை 5000 மக்களுக்குப் பயன்படச் செய்த சிறுவனின் பெரிய மனம் நம் ஒவ்வொருவரிலும் உதிக்க வேண்டும்.

பிறரில் இல்லாமையைக் காணும்போது இருகரங்களும் பகிர்ந்து, அணைக்க முன்வரவேண்டும் என்பதே இறைவனின் எதிர்பார்ப்பு.

“வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்” என்றார் வள்ளலார். பயிர்களிலும் மனித உயிர் மகத்தானதன்றோ! “தனக்கும் மிஞ்சியும் தானமும் தர்மமும்” என்பது பழமொழி. தனக்கு இருக்குமோ இல்லையோ என எதிர்நோக்காமல் கொடுப்பது தான் தானமும் தர்மமும். அதையே இன்று, “தனக்கு போகத்தான் தானமும் தர்மமும்” என சுயநலவாத சிந்தனை சுருக்கிவிட்டது.

இஸ்ரயேல் ஜனங்கள் இறைக் கட்டளையை மீறி அதிகமாய் மன்னாவைச் சேர்த்து வைத்தார்கள். அவை மறுநாள் புழுக்கள் தோன்றி கெட்டுப்போயின. அன்றன்று தேவையான உணவை இறைவன் தருவார். அவர் தந்த உணவை அன்றைய தேவையில் இருப்பவருடன் பகிர்ந்து கொள்வோம்.

“விறகினால் அடுப்பு எரியவில்லை; பசியினால் வயிறு எரிகிறது - ஏழையின் வீட்டில்” என்றான் கவிஞன் ஒருவன். எத்தனை கண்ணீர்கள் தாங்கிய கனமான வார்த்தைகள். பெற்ற மகிழ்ச்சியை, இறைவனின் ஆசீரை பிறரோடு பகிர்ந்து கொள்வோம். இறை அன்புக்கு உகந்தவர்களாவோம்.

“எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் - இங்கு

இல்லாமை இல்லாத நிலை வேண்டும்”

என்ற வார்த்தைகள் செயல்வடிவம் பெறட்டும். நம்மிடம் இருப்பதை கொடுப்போம் நல்லது செய்வோம் என்ற உள்ளத்தைப் பெற வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. ஒற்றுமையின் மறு உருவே எம் இறைவா!

உமது மக்களாகிய எம்மை திருச்சபைத் தலைமையின் கீழ் ஒன்றிணைக்க நீர் அழைத்த எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் பாகுபாடு இன்றி ஒற்றுமையாய் செயல்படவும், ஒன்றினைந்து இம்மந்தையை வழிநடத்தவும் உகந்த கருவிகளாக பயன்படுத்த வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

2. பகிர்ந்து கொள்ளுங்கள் என்று எம்மை அழைப்பவரே எம் இறைவா!

இந்நாட்டை ஆளும் தலைவர்கள், அனைத்து மாநிலங்களையும் சமமாக பாவித்து, நலத்திட்டங்களையும் பயன்களையும் அனைத்து மாநிலங்களுக்கும் சமமாக பகிர்ந்து, நாட்டை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்த தேவையான ஞானத்தை தர வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

3. எங்கள் மீது அளவற்ற அன்பை பொழிபவரே எம் இறைவா!

நாங்களும் உம்மைப் போல் அன்பால் அனைவரையும் இணைத்திடவும், பொறுமையோடும் கனிவோடும் செயல்பட எங்களுக்கு வழி காட்ட வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

4. நற்கனிகள் கொடுங்கள் என அழைப்பவரே எம் இறைவா!

எம் பிள்ளைகள் சிறு வயது முதலே பிறரோடு அன்பு பாராட்டி, உமக்குகந்த செயல்பாடுகளில் வளரத் தேவையான சூழ்நிலையையும் மனநிலையையும் தந்திட வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

5. நலன்களால் நிரப்புவரே எம் இறைவா!

எம் பகுதி வாழ் மக்களை ஆசீர்வதித்து, குடும்ப அமைதி, சந்தோஷம் பெருகவும், தக்க காலத்தில் போதுமான மழை பொழிந்து, விளைநிலம் அதிக பயன்தரவும், படிக்கும் குழந்தைகள் கல்வி, ஒழுக்கத்தில் சிறக்கவும், திருமணம், வேலைவாய்ப்பு, குழந்தை வரம் வேண்டுவோர் உமதருளால் பெற்றுக்கொள்ளவும் வரம் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா. info.arulvakku@gmail.com; +91 843 802 1938; www.arulvakku.com